# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, நிதி (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 13.75** **தபாற் செலவு : ரூபா 7.50**

## 2005 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதி (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 11/2005

**2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கும் மோட்டார் வாகனங்களின் பதிவின்மீது பிடித்து வைக்கும் வரியொன்றைச் சுமத்துவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடையனவும் அதற்கு இடைநேர்விளைவான வையுமான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான தொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டமானது, 2005 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிதிச் சட்டமென எடுத்துக்காட்டப்படலாம்.

*சுருக்கப் பெயர்.*

### பாகம் I

### 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் I ஐத் திருத்துதல்

**2.** (இப்பாகத்தில் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம், அச்சட்டத்தின் பாகம் I இன் (பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்றைச் விதித்தல்) 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கச் சட்டத்தின் I ஆம் பாகத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) "செலுத்துதகு விற்பனை வரவு" எனும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில் " ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தவிர்ந்த" என்னும் சொற்களுக்குப் பதிலாக "(அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத, அத்தகைய பண்டங்களின் மொத்த விற்பனையை அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்ற ஏதேனும் வியாபாரமாக அல்லது தொழிலாக இராத) ஏதேனும் வியாபாரம், தொழில் அல்லது உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் தவிர்ந்த" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) "விற்பனை வரவு" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தில், அதன் (ii) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

2 –PL 000174 – 1,250 (2005/03)

"(ii) எவையேனும் மூலதனச் சொத்துக்களைக் கையுதிர்ப்பதிலிருந்தான மொத்த வரும்படிக ளைக் கழித்த பின்னரும் ; அத்துடன்".

முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால் செலுத்தப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவுத் தொகை யானது (இதனகத்துப்பின்னர் "முதலிற் கூறப்பட்ட இயைபான வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அந்த இயைபான வரிமதிப்பீட்டாண் டிற்காக அந்த ஆளினால் அல்லது பங்காண்மையி னால் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமான வரியிலிருந்து கழிக்கப்படலாம்)." என்னும் சொற்களுக் குப் பதிலாக, "எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவுத் தொகையானது அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்காக அந்த ஆளி னால் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமான வரி ஏதுமிருப்பின் அதிலிருந்து கழிப்பனவு செய்யப் படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் ; இது அதன் உட்பிரிவு (1அ) என்றாற்போன்று பயனுறுதல் வேண்டும் :-

"(1அ) ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண் டிற்காக ஏதேனும் பங்காண்மையால் செலுத்தப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவுத் தொகையானது அத்த கைய பங்காண்மையின் பங்காளர்கள் அந்த இயை பான வரிமதிப்பீட்டாண்டிற்காக அத்தகைய பங்காண் மையின் இலாபங்களை அல்லது நட்டங்களை எந்த விகிதாசாரத்தில் பகிர்ந்துகொள்கின்றார்களோ அந்த விகிதாசாரத்தில் அத்தகைய பங்காளர்களிடையே பங்கிடப்படுதல் வேண்டும் ; அவ்வாறு பங்கிடப்பட்ட சேவை விதிப்பனவுத் தொகையானது அத்தகைய

பங்காளரால் அத்தகைய இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு (இதனகத்துப்பின்னர் "முதலிற் கூறப்பட்ட இயைபான வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய பங்காண்மையினால் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அத்தகைய சேவை விதிப்பனவின் மீதி ஏதேனும் இருப்பின் அம்மீதி (இதனகத்துப்பின்னர் "முதலில் அடுத்துறும் இயைபான மதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் கூறப்பட்ட இயைபான மதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு, அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையினால் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "எவரேனும் ஆளினால் செலுத்தப்பட்ட "அத்தகைய சேவை விதிப்பனவின் மீதி ஏதேனும் இருப்பின் அம்மீதி (இதனகத்துப்பின்னர் "முதலில் அடுத்துறும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் கூறப்பட்ட இயைபான வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(4) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்து அதன் உட்பிரிவு (2அ) எனப் பயனுறவேண்டிய பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :

"(2அ) உட்பிரிவு (1அ) என்பதற்கிணங்க ஏதேனும் பங்காண்மைக்கு பங்கிடப்பட்ட ஏதேனும் சேவை விதிப்பனவின் மீதி ஏதேனும் இருப்பின், 2அ (1அ) என்னும் உட்பிரிவிற்கிணங்க கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் (இதனகத்துப்பின்னர் "முதலில் அடுத்துறும்

இயைபான வரிமதிப்பீட்டாண்டு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) முதலில் கூறப்பட்ட இயைபான வரி மதிப்பீட்டாண்டை அடுத்துறும் இயைபான வரிமதிப் பீட்டாண்டிற்கு அத்தகைய பங்காண்மையால் செலுத் தப்படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(5) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் அத்தகைய சேவை விதிப்பனவின் மீதியில் ஏதேனும் மிச்சம் இருப்பின், அது (இதனகத்துப்பின்னர் “இரண்டாவதாக அடுத் துறும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு குறிப்பீடுசெய் யப்படும்) முதலில் அடுத்துறும் இயைபான வரிமதிப் பீட்டாண்மை உடனடுத்துவரும் இயைபான வரிமதிப் பீட்டாண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “விடயத்திற்கேற்ப அத்தகைய சேவை விதிப்பனவின் அல்லது சேவை விதிப்பனவின் பாகத்தின் மீதியின், ஏதேனும் மிச்சம் இருப்பின், அது (2) ஆம் உட்பிரிவுக்கு அல்லது (அஅ) என்னும் உட்பிரிவுக்கிணங்க கழிப்பனவு செய்யப்பட்ட பின்னர் (இதனகத்துப்பின்னர் இரண்டாவதாக அடுத்துறும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முதலில் அடுத்துறும் இயை பான வரிமதிப்பீட்டாண்டை உடனடுத்துவரும் இயை பான வரிமதிப்பீட்டாண்டிற்கு விடயத்திற்கேற்ப அத்த கைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மை யின் அத்தகைய பங்காளரினால் செலுத்தப்படற்பால தான இயைபான வருமானவரியிலிருந்து கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(6) முதன்மைச் சட்டவாக்கத்தின் (5) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :

“(5) இப்பிரிவின் நோக்கங்களுக்காகவும் ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு இயைபாகவும் -

"பொறுப்பாகக்கூடிய மொத்த விற்பனை வரவுக்கு ஏற்றிக்கூறப் படற்பாலதான" என்னும் சொல்லமைப்பு ஏதேனும் பங்காண்மையின் எவரேனும் பங்காளரின் பிரிக்கப் படற்பாலதான இலாபங்களின் பங்கின் ஏதேனும் பாகம் தொடர்பில், அத்தகைய இயைபான வரிமதிப்பீட்டாண் டிற்கு அத்தகைய பங்காண்மையிலிருந்து அத்தகைய பங்காளரின் பிரிபடற்பாலதான இலாபங்களின் பங்கு தொடர்பில் அத்தகைய இயைபான வரிமதிப்பீட்டாண் டிற்கு அத்தகைய பங்காண்மையின் பொறுப்பாகக்கூடிய மொத்த விற்பனை வரவானது, அத்தகைய இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய மொத்த விற்பனை வரவு எவ் விகிதாசாரத்தில் அமையுமோ அவ்விகிதா சாரத்திலான பணத்தொகை" என்று பொருள்படும்.

"செலுத்தப்படற்பாலதான இயைபான வருமானவரி" என்னும் சொல்லமைப்பு -

(அ) ஏதேனும் பங்காண்மை தொடர்பில் அல்லது எவரேனும் ஆள் ஏதேனும் பங்காண்மையின் பங்காளரொருவராக இல்லாதவரை அத்தகைய ஆள் தொடர்பில் -

அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையால் அல்லது வேறு எவரேனும் ஆளினால் அல்லது பங்காண்மையால் அந்த இயைபான வரிமதிப் பீட்டாண்டின் முதலாம் நாளுக்கு உடன் முற்போந்த முப்பத்தாறு மாதங்களைக் கொண்ட வொரு காலப்பகுதிக்குள்ளமையும் ஒரு தேதியன்று எவ்வியாபாரத்தில் அல்லது தொழிலின் (அத்த கைய ஆளினால் அல்லது பங்காண்மையால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத அத்தகைய பண்டங்களின் மொத்த வியாபாரத்தில் அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபடும் ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில் அல் லாத) உயர்தொழிலின் அல்லது வாழ்க்கைத் தொழிலின் வர்த்தகத் தொழிற்பாடுகள் தொடங் கினவோ அந்த ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில் அல்லது உயர்தொழில் அல்லது வாழ்க் கைத்தொழில் அல்லாததும் அவ்வாளினால்

கொண்டுநடாத்தப்பட்டதும் அல்லது பிரயோகிக்கப்பட்டதுமான வியாபாரம், தொழில், உயர் தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் ஒவ்வொன்றிலுமிருந்து அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அவ்வாளின் அல்லது பங்காண்மையின் கூட்டுமொத்த நியதிச்சட்ட வருமானம், அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் அல்லது பங்காண்மையால் செலுத்தப்படற்பாலதான மொத்த வருமானவரியானது அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அந்த ஆளின் அல்லது பங்காண்மையின் மொத்த நியதிச்சட்ட வருமானத்திற்கு எந்த விகிதாசாரத்தில் அமையுமோ அதே விகிதாசாரத்திலான அத்தகைய பணத்தொகை என்று பொருள்படும் ; அத்துடன்

(ஆ) எவரேனும் ஆள், அத்தகைய ஆள் ஏதேனும் பங்காண்மையின் பங்காளரொருவராக இருக்கும் வரை அத்தகைய பங்காண்மையால் கொண்டு நடாத்தப்படும் அல்லது பிரயோகிக்கப்படும் வியாபாரம், தொழில், உயர்தொழில், அல்லது வாழ்க்கைத்தொழில் ஒவ்வொன்றினதும் பொறுப்பாகக்கூடிய மொத்த விற்பனைவரவுக்கு ஏற்றிக்கூறப்படற்பாலதானவாறு அத்தகைய பங்காண்மையிலிருந்து அத்தகைய ஆளின் பிரிபடற்பாலதான இலாபங்களின் பங்கின் அத்தகைய பாகம் தொடர்பில், அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் செலுத்தப்படற்பாலதான மொத்த வருமானவரியானது அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அவ்வாளின் அல்லது பங்காண்மையின் மொத்த நியதிச் சட்ட வருமானம் எந்த விகிதாசாரத்தில் அமையுமோ அதே விகிதாசாரத்தைக் கொண்ட பணத்தொகை என்று பொருள்படும் :

“செலுத்தப்படற்பாலதான மொத்த வருமானவரி” என்பது எவரேனும் ஆள் தொடர்பில், அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளின் அல்லது

பங்காண்மையின் வரிவிதிக்கப்படற்பாலதான வருமானத்திற்கு உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான தோதான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வாறான வருமானவரி வீதத்தை ஏற்புடைத்தாக்கு வதன்மூலம் ஆய்ந்தறியப்படும் பணத்தொகை என்று பொருள்படும், அத்துடன்

(7) அப்பிரிவிற்கான ஓரக்குறிப்பிற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :

"சேவை விதிப்பனவு இயைபான வருமானவரி யிலிருந்து கழிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு, அதிலுள்ள "அத்தியாயங்கள் XIX, XX, XXI", என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக, "அத்தியாயங்கள் XII, XIX, XX, XXI" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்படுத்தப்படுகின்றது என் பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 11அ என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :

"ஒழுங்குவிதிகள்.

11அ. (1) அமைச்சர், எந்தக் கருமங்கள் விதித் துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தால் தேவைப்படுத்தப்படுகின்றாரோ அந்த எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டும் என இச்சட்டத்தின்கீழ் தேவைப்படுத்தப்படுகின் றதோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றதோ அக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர் குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரி வால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொது மைக்குப் பங்கமின்றியும் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் பயன்படுத்தப்பட்டவாறு "மொத்த விற்பனை வரவு" என்னும் சொல்லமைப்பின்

பொருள், அவ்வுட்பிரிவில் "மொத்த விற்பனை வரவு" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக் கணத்திற்கான காப்பு வாசகம் ஏற்புடைத்தாகாத விடத்து அத்தகைய விடயங்களுக்கு ஏற்புடைத்தாக்கு கையில் ஆய்ந்தறியப்படவேண்டியமுறை தொடர் பிலான வழிகாட்டிகளைக் குறித்துரைத்து ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன் வெளியீட்டுத் தேதியன்று அல்லது அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடை முறைக்கு வருதலும் வேண்டும்.

(4) ஓராம் ஒழுங்குவிதியின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக்கூடிய விரைவில் அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத் திற்கு முன்வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்க மின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி அவ்வாறு இல்லா தொழிக்கப்பட்டதாகக் கருதப்பட்ட தேதிபற்றி அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**6.** முதன்மைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) "முகவர்" "தேய்மானத்திற்கான கழிவு," அத்துடன் "வரிமதிப்பீட்டாளர்" என்னும் சொல்லமைப்புகளின் வரைவிலக்கணத்தில் அச்சொல்லமைப்புகளுக்குப் பதிலாக "முகவர்", "தேய்மானத்திற்கான கழிவு", "வரிமதிப்பீட்டாளர்" அத்துடன் "கம்பெனி" என்னும் சொல்லமைப்புகளை இடுவதன்மூலமும் ;

(2) "முதலீட்டுச்சபை தொழில்முயற்சி" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :

"முதலீட்டுச்சபை தொழில்முயற்சி" என்பது ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டு தொடர்பில் 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச் சபையால் செய்துகொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் நியதிகளின்படி எந்தத் தொழில்முயற்சி தொடர்பில் வருமானவரியிலிருந்து அதன் இலாபங்களினதும் வருமானத்தினதும் விலக்களிப்பு அந்த இயைபான வரிமதிப்பீட்டாண்டு முழுவதும் அல்லது அதன் ஏதேனும் பகுதியில் வலுவிலிருக்கின்றதோ அந்தத் தொழில்முயற்சி என்று பொருள்படும் ;";

(3) "ஆள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :

"ஆள்" என்பது கம்பெனியொன்றை அல்லது ஆட்கள் குழுவொன்றை உள்ளடக்கும் ; ஆனால் -

(அ) 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தை ;

(ஆ) வானூர்தியொன்றின் அல்லது கப்பலொன்றின் ஒரு சொந்தக்காரராக அல்லது வாடகையாளராகத் தொழிலைக் கொண்டுநடாத்தும் வதிவற்ற ஆளை வரையும்

உள்ளடக்க மாட்டாது.

*பாகம் I இன் நடைமுறையும் பிரிவுகளின் கடந்த காலத்தை உள்ளடக்கும் நடைமுறையும்.*

**7.** (1) இச்சட்டத்தின் பாகம் I இன் ஏற்பாடுகள் (2) ஆம் உட்பிரிவிற்கமைய எல்லா நோக்கங்களுக்காகவும் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் ஏற்பாடுகள் எல்லா நோக்கங்களுக்காகவும் 2004, ஏப்பிறல் 1 ஆம் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் :-

(அ) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1), (2), (3), (4), (5) மற்றும் (6) ஆம் விடயங்களால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (2) ஆம் விடயத்தால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம்.

## பாகம் II

## பாகம் IIIஅ என்னும் புதிய பாகத்தை உள்ளடக்குவதற்கென 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துதல்.

*2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் IIIஅ என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.*

**8.** இரண்டாயிரத்து நாலாம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 28 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டவாக்கத்தின் பாகம் IIIஅ (பிரிவுகள் 28அ, 28ஆ. அத்துடன் 28இ) என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

## பாகம் IIIஅ

## மோட்டார் வாகனங்கள் பதிவுசெய்யப்படுவதன்மீது பிடித்துவைக்கும் வரியின் விதிப்பனவு

*மோட்டார் வாகனங்கள்மீது பிடித்துவைக்கும் வரியின் விதிப்பனவு.*

28அ. (1) பகிரங்கப் போக்குவரத்தை வழங்கும் நோக்கத்திற்கு மாத்திரம் பயன்படுத்தப்படும் முச்சக்கர வாகனங்கள், லொறிகள், பஸ் வண்டிகள் என்பனமீது தவிர, (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்

கிணங்க மோட்டார் வாகன ஆணையாளரால் பதிவுசெய்யப்படும் மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும் 2005, ஏப்பிறல் 1 ஆம் தேதியிலிருந்து பிரிவு 28ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்டவாறான வீதங்களுக்கிணங்க பிடித்துவைத்தல் வரியொன்று செலுத்தப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கத்திற்கு "மோட்டார் வாகனம்" என்பது (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இப்பிரிவின் நியதிகளின்படி செலுத்தப்படற்பாலதான பிடித்துவைக்கும் வரி விண்ணப்பகாரரால் செலுத்தப்பட்டாலன்றி மோட்டார் வாகன ஆணையாளர் ஏதேனும் மோட்டார் வாகனம் தொடர்பில் பதிவுச் சான்றிதழொன்றை வழங்குதலாகாது.

வரி கணிப்பிடப்பட வேண்டிய வீதம்.

28ஆ. பிரிவு 28அ என்பதன்கீழ் விதிக்கப்படும் பிடித்துவைத்தல் வரி பின்வரும் வீதத்தில் இருத்தல் வேண்டும் :

(அ) மோட்டார் வாகனமொன்றின் முதலாவது பதிவொன்றுக்கு ரூபா ஐயாயிரம் பணத் தொகையொன்று, அத்துடன்

(ஆ) வேறு பதிவு ஒவ்வொன்றிற்கும் ஆயிரம் ரூபா பணத்தொகையொன்று.

சேகரிக்கப்படும் தொகை திறைசேரிச் செயலாளருக்கு அனுப்பப் படுதல் வேண்டும்.

28இ. மோட்டார் வாகன ஆணையாளர் இப்பாகத்தின் நியதிகளின்படி பிடித்துவைக்கும் வரியாக அவரால் சேகரிக்கப்பட்ட தொகையை, அவரால் சேகரிக்கப்பட்ட பணத்தின் விவரத்திரட்டொன்றுடன் சேர்த்து வரிசேகரிக்கப்பட்ட மாதத்தையடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளுக்கு முன், திறைசேரிச் செயலாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

பிடித்து வைக்கும் வரியானது வருமான வரியிலிருந்து கழிக்கப்படுதல்.

28ஈ. சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி பிடித்துவைக்கும் வரியைச் செலுத்தியுள்ளவரான எவரேனும் ஆள், அத்தகைய ஆளினால் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின்கீழ்ச் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து அத்தகைய பிடித்துவைக்கும் வரியைக் கழிப்பனவு செய்வதற்கு உரித்துடையவர் ஆதல் வேண்டும்.”.

## பாகம் III

## 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்

2004 ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க, நிதிச் சட்டத்திற்கான அட்டவணையைத் திருத்துதல்.

**9.** இரண்டாயிரத்து நாலாம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்திற்கான அட்டவணை (பாகம் I இன் கீழ் விதிக்கப்படற்பாலதான சேவை விதிப்பனவு வீதம் தொடர்பிலானது) இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(1) அவ்வட்டவணையின் 2 ஆம் விடயத்தில் “1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்திருந்த ஏதேனும் முதலீட்டுச்சபைத் தொழில் முயற்சியின்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “ஏதேனும் முதலீட்டுச்சபைத் தொழில்முயற்சியின்” என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அவ்வட்டவணையின் விடயம் 4 இல் “எவ்வேதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழிலிலிருந்தான” என்னும் சொற்களுக்குப் பதிலாக “எந்த வியாபாரத்தில் அல்லது தொழிலில் (வரி வணிகர் ஒருவரால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத அத்தகைய பண்டங்களின் மொத்த விற்பனையில் அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வியாபாரம் அல்லது தொழில் அல்லாத) அல்லது உயர்தொழிலில் அல்லது வாழ்க்கைத்தொழிலிருந்தான இலாபமும் வரவும் என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(3) அவ்வட்டவணையின் 4 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும் ;

"5 வரி வணிகர் ஒருவரால் உற்பத்தி செய்யப்படாத அல்லது தயாரிக்கப்படாத அத்தகைய பண்டங்களின் மொத்த விற்பனையில் அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஏதேனும் வியாபாரத்தில் அல்லது தொழிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டிருப்பதான செலுத்துதகு மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம். 0.5 சதவீதம்"

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**10**. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*